# தமிழ்மொழியும் இலக்கியமும்

## தரம் 11

## பத்திரிகைச் செய்தி

**Mrs.Navamany Rajakumar**
**J/Kondavil Ramakirushna Mahavidyalayam**

# பத்திரிகைச் செய்தி பற்றி அறிவோம்

- பொதுமக்களின் தகவல் தொடர்பாடல் சாதனங்களில் பத்திரிகையும் ஒன்றாகும்.
- பத்திரிகை அந்தக் காலம் தொடக்கம் இன்றுவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் ஊடகமாக விளங்குகின்றது.
- பெருநகரம் முதல் குக்கிராமம் வரை சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றுசேர்ப்பதில் பத்திரிகை பெரும்பங்கு வகிக்கின்றது.
- பத்திரிகைகள் நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம் என்னும் ஒழுங்கில் வெளிவருவன.
- செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள், ஆசிரியர் தலையங்கம், தகவல்கள், பக்திசார்ந்த எழுத்துக்கள், விளம்பரங்கள் முதலான பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கியதாக இவை வெளிவருகின்றன.

# பத்திரிகைச்செய்தி எழுதப்படும் போது அவதானிக்க வேண்டிய அம்சங்கள்

- தலைப்பு
- விடயத்தெளிவு எளிமையான மொழிநடை
- தனித்துவமான சொற்பிரயோகம்
- தேவைக்கேற்ப சுருக்கியும் விரித்தும் எழுதுதல்
- பக்கச்சார்பின்றி அமைத்தல்
- நம்பகத்தன்மை
- உறுதிப்படுத்தப்பட்ட செய்திகளையே வெளியிடுதல்
- சமூக அக்கறையை வெளிப்படுத்துல்

# பத்திரிகைச் செய்தி மாதிரிகள்



## சீனியின் விலையும் விரைவில் அதிகரிப்பு

கொழும்பு,ஜூன் 25

உடன் நடைமுறைக்கு வரும் வகையில் சீனி இறக்குமதியை அரசு இடைநிறுத்தியுள்ளதால், சீனியின் விலை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

சீனி இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திரங்கள் கடந்த 22 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டாளர் தமயந்தி கருணாரட்ன அறிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானம் காரணமாக அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட சீனி இறக்குமதியாளர்களால் இறக்குமதி செய்யப்படவிருந்த இரண்டு லட்சம் மெற்றிக் தொன் எடையுடைய சீனி இறக்குமதி இடைநிறுத்தப்படும் என்று ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுப் பணியகத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். சீனி இறக்குமதி இடைநிறுத்தப்பட்டதை அடுத்து, சீனியின் மொத்த விற்பனை விலையை சில மொத்த வியாபாரிகள் அதிகரித்துள்ளனர்.

இனி வரும் நாள்களில் சீனியின் சில்லறை விற்பனை விலையும் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)



சிறுவர்களைத் தாக்கும்

## மிஸ்ஸி நோயால் பாதிப்பு குறைவு

எனினும் அவதானம் தேவை என்கிறார் மருத்துவர்

கொழும்பு,ஜூன் 25


கொரோனாத் தொற்றுக்கு உள்ளான சிறுவர்களைத் தாக்கும் 'மிஸ்ஸி' என்ற நோய், பெரும்பாலும் அவர்களது உடற்பாகங்களை அல்லது தொகுதிகளை பாதிக்கக் கூடியது. எனினும் ஒரு வீதத்துக்கும் குறைவானோரே இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சிறுவர் நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் சன்ன டி சில்வா தெரிவித்தார். சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

இந்த நோய் தொடர்பில் பெற்றோர் வீண் அச்சமடையத் தேவையில்லை. இலங்கையில் முதியோருடன் ஒப்பிடும் போது, சிறுவர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகும் வீதம் குறைவாகவே உள்ளது. நாட்டில் ஏற்பட்ட முதலாவது கொரோனா அலையில் தொற்றுக்குள்ளான 14 வயதுக்குக் குறைவான சிறுவர்களில் 55 வீதமானோருக்கு எவ்வித தொற்று அறிகுறிகளும் தென்படவில்லை. எனவே இரண்டு நாள்களுக்கும் மேல் தடிமன் உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக மருத்துவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சிறுவர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான போதிலும், பாரதூரமான பாதிப்புக்கள் ஏற்படுவதில்லை. ஆனால் நாள்பட்ட தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பிறப்பிலேயே நோய் எதிர்ப்பு சக்தி குறைவானோர் ஆகியோருக்கு தொற்று ஏற்பட்டால், அபாய நிலைமை ஏற்படும்.

எனவே அவ்வாறான சிறுவர்கள் தொடர்பில் பெற்றோர் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும். தற்போது இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான சிறுவர்களுக்கு 'மிஸ்ஸி' என்ற நோய் ஏற்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

சிறுவர்களின் வழமையான செயற்பாடுகளில் அதாவது தொடர்ந்து நித்திரை கொள்ளல் , சோர்வு மற்றும் உணவைத் தவிர்த்தல், வாந்தி உள்ளிட்ட வழமைக்கு மாறான விடயங்களை அவதானித்தால் தாமதிக்காது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் சிகிச்சைகளைத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் -என்றார். (ஒ.4)



## சுனாமி

சுனாமி என்பது ஜப்பானிய வார்த்தை. பேரழிவை உண்டாக்கும் ராட்சத அலைகளை ஜப்பான் மொழியில் சுனாமி என்று அழைப்பர். அந்த ஜப்பானிய வாரத்தையை உலகம் முழுதும் அன்று தெரிந்துகொண்டது.

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதியில் சுனாமி என்ற இயற்கைச் சீற்றத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டனர். கோடிக்கணக்கான மதிப்புடைய பொருள்களும் சேதமடைந்தன.

கிழக்கிந்திய தீவான சுமத்ராவில் மிகக்கோரமான பாதிப்பை ஏற்படுத்திய சுனாமி அலைகள் தமிழகத்தின் நாகப்பட்டினம், காரைக்கால், கன்னயாகுமரி, குளச்சல், கேரளாவின் சில கடற்கரைப் பகுதிகளிலும் பெரும் நாசத்தை ஏற்படுத்தின.

கடல் அலைகள் பெரும் சீற்றம் கொண்டு தரைப்பகுதிக்கு வந்ததாலேயே இந்தப் பேரழிவு ஏற்பட்டது. கோதரத் தாண்டவம் ஆடும் இவ்வகை ராட்சத அலைகளை 'சுனாமி' என்று அழைப்பார்கள் என்று ஜப்பான் தெரிவித்தது.

சுமார் 1000 ஆண்டுகளுக்குப் பிறகே இத்தகைய சுனாமி தாக்குதல் நடந்துள்ளது எனவும் அறியப்பட்டது.

கடலுக்குள் நிலநடுக்கம் ஏற்படும்போது கடலுக்குள் இருக்கும் நிலத்தில் சில இடங்கள் மேடாகவும் சில இடங்கள் தாழ்ந்தும் போகும். இந்த திடீர் மாற்றத்தால் கடல் நீர் மட்டம் சில இடங்களில் உயர்ந்தும் சில இடங்களில் தாழ்ந்தும் போகும்.

கடல் நீர் மட்டம் உயரும்போது அந்தப்பகுதிகளில் ராட்சத அலைகள் வீசும். அவ்வாறு வீசிய ராட்சத அலைகளை கடலை ஒட்டிய நிலப்பரப்புக்குள் புகுந்து பேரிழப்பை உண்டாக்கும். அதுபோல கடலுக்குள் நிலம் தாழ்ந்தும் போகும் இடங்களில், கடல் நீர்மட்டம் அமிழ்ந்து போகும். அந்த இடங்களில் கடல் நீரானது நிலப்பரப்பை விட்டு உள்வாங்கிப் போகும். உலகெங்கும் சுனாமி தாக்கியதால் ஏறக்குறைய ஒரு லட்சம் மனிதர்கள் இறந்து போனார்கள்.



## டெல்டா வைரஸுடன் பெண்ணொருவர் அடையாளம்

கொழும்பு,ஜூன் 23

கொழும்பில் டெல்டா வைரஸ் தொற்றுடன் பெண்ணொருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன் மாதிவெலப் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டிருந்தார். தற்போது அதே பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய பெண் ஒருவரும் இந்தத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, அல்பா திரிபு வைரஸுடன் 10 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொழும்பு மாநகர சபையின் பிரதான மருத்துவ அதிகாரி மருத்துவர் ருபன் விஜயமுனி தெரிவித்துள்ளார். (ஒ-4)

# ஒரு நாளாந்த, வாராந்தப் பத்திரிகையில் இடம்பெறும் விடயங்களைப் பட்டியற்படுத்துக.

- உள்நாட்டுச்செய்திகள்
- வெளிநாட்டுச்செய்திகள்
- கட்டுரைகள்
- கவிதைகள்
- ஆசிரியர்தலையங்கம்
- விளையாட்டுச்செய்திகள்
- பக்திஎழுத்துக்கள்
- விளம்பரங்கள்

# இயற்கை அனர்த்தம் தொடர்பான பத்திரிகைச் செய்தி



## விசுவமடுவில் காற்றுக் காரணமாக பெருமளவான வாழைகள் அழிவு!

முல்லைத்தீவு.மே 27

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடுப் பகுதியில் நேற்றுமுன் தினம் வீசிய கடும் காற்றுக் காரணமாக அதிகளவான வாழைத்தோட்டங்கள் அழிவடைந்துள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

விசுவமடு பிரதேசத்தில் அதிகளவான விவசாயிகள் வாழைத் தோட்ட செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். கடும் காற்றால் சுமார் 15 செய்கையாளர்களின் ஆயிரத்துக்கு மேற்பட்ட வாழைகள் குலைகளுடன் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால் வாழைத் தோட்ட விவசாயிகள் பெரியளவான அழிவையும். பொருளாதார ரீதியிலான பின்னடைவையும் எதிர்கொண்டுள்ளனர். (ஐ-19)

# விபத்து தொடர்பான பத்திரிகைச் செய்தி



## கனரக வாகனங்கள் மோதுண்டு விபத்து

யாழ்ப்பாணம். மே 27

யாழ். கொடிகாமம் – பருத்தித்துறை வீதியில் இரு கனரக வாகனங்கள் நேருக்கு நேர் மோதி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விபத்துக்குள்ளாகின. கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் காணப்பட்ட வளைவு ஒன்றில் இரு வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச் செல்ல முற்பட்டபோது. குறித்த விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப-20)

# விளையாட்டுத் தொடர்பான பத்திரிகைச் செய்தி

## வங்கப் புலிகளின் வேட்டைக்கு இரையாகியது இலங்கை அணி

**வரலாற்று வெற்றியாகவும் பதிவானது**

டாக்கா, மே 26

இலங்கைக்கு எதிராக நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றி பெற்றது பங்களாதேஷ் அணி. இந்த வெற்றியை அடுத்து வரலாற்றில் முதல் முறையாக இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் தொடரொன்றை பங்களாதேஷ் கைப்பற்றியது.





நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடி அனைத்து இலக்குகளையும் இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது. 15 ஓட்டங்களுக்கு இரு இலங்குகளை பங்களாதேஷ் இழந்தது. எனினும் ரகிமின் நீண்ட - பொறுப்பான ஆட்டத்தால் 246 என்ற கௌரவ நிலையை பங்களாதேஷ் அடைந்தது. ரகிம் 125 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் சன்டகன். சமீர இருவரும் தலா 3 இலக்குகளையும். உதான 2 இலக்குகளையும். ஹசரன்க ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி பொலுபொலுவென சீரான இடைவெளியில் இலக்குகளைப் பறிகொடுத்து 40 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து வெறும் 149 ஓட்டங்களைப் பெற்றது. மழை குறுக்கிட்டதையடுத்து 103 ஓட்டங்களால் வென்றது பங்களாதேஷ். ஆட்ட நாயகனாக ரகிம் தெரிவானார். (ம)

# நன்றி